# அனுதின மன்னா

## தினசரி வேத தியானக் குறிப்புகள்

குறிப்பு : ஒவ்வொரு நாளின் தியானக்குறிப்புகளின் இறுதியில் தமிழ் நாட்டின் பல பாகங்களிலுள்ள சபைகளின் விலாசமும் அங்கு முழு நேர ஊழியத்தின் அழைப்பைப் பெற்று, சபையாரால் ஊழியத்துக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டு ஊழியம் செய்து வரும் தேவ ஊழியர்களின் விலாசமும், அதோடு வட மாநிலங்களில் பலவித பாடுகள் எதிர்ப்புகள் நடுவில் ஊழியம் செய்து வரும் தேவ ஊழியர்களின் பெயர்களும் சேர்க்கப்பட்டுள்ளன. மாதத்தின் கடைசி 3 நாட்களில் இவர்களின் 3 பெயர்களும் ஆங்கில விலாசத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இத்தியானங்களை உபயோகிக்கிற ஒவ்வொருவரும் தங்கள் ஜெபங்களிலும் அந்தந்த நாளில் குறிக்கப்பட்டிருக்கும் சபை மற்றும் ஊழியர்களை கிருபாசனத்திற்கு முன்பாக ஜெபத்தில் நிறுத்தவும் அந்தந்த இடங்களிலுள்ள சபைகளின் மூலமாய் தேவனுடைய அநந்த ஞானம் வெளிப்பட்டு, இக்கடைசி நாட்களில் சபையில் அனுதினம் ஆத்துமாக்கள் சேர்க்கப்படும்படி ஜெபிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### தியானப்பகுதி: கிறிஸ்து இயேசு

**ஏப்ரல் 1, புதன். தேவனாகிய கிறிஸ்து: (1 தீமோ 6:13-16) :** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மகிமையுள்ள தேவனாவார். அவரை அறிந்து கொள்ள இன்றைய உலகம் தடுமாறுகிற காரணம், அவருடைய மனித அவதாரமாகும். நித்தியானந்தமுள்ள தேவன் இதோ துக்கமும், வியாகுலமும் நிறைந்தவராக கண்ணீர் சிந்துகிறார். ஏகசக்ராதிபதியாகிய அவர் இதோ முகங்குப்புற விழுந்து மன்றாடுகிறார். தேவன் தேவனை வணங்குவதா ? இந்த புரியாத புதிரை யார் புரிய வைக்க முடியும் ? ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தருமான அவர், இதோ அடிமையைப் போல தமது சீஷர்களுக்கு பணிவிடை செய்து கொண்டிருக்கிறார். தாம் ஒருவரே சாவாமையுள்ளவராயிற்றே ! ஆனால் என் ஆத்துமா மரணத்திற்கேதுவாகத் துக்கங்கொண்டிருக்கிறது என்று கலங்குகிறார். சேரக்கூடாத ஒளியில் வாசம்செய்யும் அவர் இதோ இருளான இடங்களில் முப்பது வருஷங்களாகச் சுற்றித் திரிந்து, மூன்று மணிநேர அந்தகாரத்தில் பிரவேசித்துத் துடித்துக்கொண்டிருக்கிறார். பின்பு அவர் பாதாளத்திற்குச் சென்று, இருளை சந்திக்க, இதை முன் ருசியாக அனுபவித்தார் போலும் ! மகா பரிசுத்தமுள்ளவர் என்று ஏறெடுத்துப் பார்க்கத் துணியாத தூதர்களால் போற்றப்பட்டவர்; இதோ உலகத்தின் அசுத்தமான, கேவலமான பாவங்களை சுமந்ததோடு, தாமும் பாவமாக்கப்பட்டவராய் உலகத்தாரால் புறக்கணிக்கப்படுகிறார். யாரும் கண்டிராதவரும், காணக் கூடாதவருமாகிய அதரிசனமான தேவன் இதோ பொந்தியுபிலாத்து முன்பதாக கூனி, குறுகி நின்று தமது சாட்சியை விளங்கச் செய்து கொண்டிருக்கிறார். என் தேவனே, உமக்கு ஏன் இந்த கோலம் ? என்னை நேசித்ததினால் வந்த விளைவுகளோ இது ? **(ஜெபத்தில் நினைவு கூருங்கள் :** கிறிஸ்தவ சபை, கிழக்கு தெரு, காந்திபுரம்,

சேந்தமங்கலம் – 637409, நாமக்கல் மாவட்டம். **ஊழியர் :** சகோ. I. ராமசாமி)

**2. வியாழன், தேவனுடைய ரூபமான கிறிஸ்து: (பிலி. 2:3-11) :** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவனுடைய ரூபமாக இருந்தார். இது என்ன புதிர் ? தேவன் ஆவியாயிருக்கும்போது அவருக்கேது ரூபம் ? ஆம் ! ஆவி வார்த்தையாகி ஒலிவடிவமானது போல தேவன் மாம்சமானார். இவர் தேவனுடைய தற்சொருபமானவர். தேவனுடைய அரையில் செல்லப்பிள்ளையாக இருந்தவர். இவர் தேவனுக்கு சமமாக சர்வசிருஷ்டிக்கும் முந்தினவராக இருந்தவர். தமது அனந்த ஞானத்தில், மனித சிருஷ்டியை உருவாக்குமுன் தமக்காக ஒரு சாயலைப் படைத்துக் கொண்டு, அந்த சாயலில் மனிதனை உருவாக்கினார்; பின்பு காலம் நிறைவேறினபோது, தாம் உண்டாக்கின மனிதர்களுக்குள்ளே இருந்து மாம்சத்தில் வெளிப்பட்டார். மகா மேன்மையுள்ள இந்த இரகசியத்தை யாவரும் ஒப்புக்கொள்ளும்படி, தமக்காக ஒரு சந்ததியைப் பிரித்துக்கொண்டு, அவர்களுக்கு நியாயப்பிரமாணத்தை அருளிச் செய்தார். தாம் வெளிப் பட்டபோது, கிருபையும், சத்தியமும் உள்ளவராக அந்த பிரமாணங்களை எதிர்கொண்டதின் விளைவாக, தம்முடைய சுய இரத்தத்தை சிந்தி, உலகத்தார்களை சம்பாதித்து, இன்று சர்வத்திற்கும் மேலான தேவனானார். என் தேவனே, உமது அனந்த ஞானத்திற்காகவும், நீசனாகிய என்னையும் நேசித்த உம்முடைய அன்புக்காகவும் என் சிரத்தை உம்முடைய மலர் பாதங்களுக்குத் தாழ்த்துகிறேன். **(ஜெபத்தில் நினைவு கூருங்கள் :** கிறிஸ்தவ சபை, எபநேசர் ஜெப வீடு, 213A, அம்பேத்கர் நகர், பெருமாள் கவுண்டன்பட்டி, இளம்பிள்ளை, சேலம் மாவட்டம் 637502)

**3.வெள்ளி, சிறியவராக்கப்பட்ட கிறிஸ்து (எபி.2:6-10):** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவதூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டார். ஓர் எஜமான் தன்னுடைய வேலைக்காரனுக்குக் கீழாக இருந்து வேலை செய்வது எப்படி ? இந்த தேவதூதர்கள் தேவனுடைய முதல் சிருஷ்டிப்பானாலும், மகிமையுள்ளவர்கள் என்றாலும் வாக்குத்தத்தங்கள் பெற்றவர்கள் இல்லை. அவர்களுக்கு சுயமான கிரியைகள் இல்லை. அவர்கள் தொழுகைக்கு உரியவர்கள் இல்லை. அவர்கள் அரூபியாக இருக்கிறார்கள். ஆனால் நமதாண்டவர் வாக்குத்தத்தங்களைப் பெற்றவர். தமது சுய கிரியைகளினால் பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, சகலத்தையும் தம்முடைய வசனத்தினால் தாங்கி ஆளுகிறவர். இவரே தொழுகைகுரிய மனுஷ குமாரனாக ரூபம் கொண்டவர். சகலமும் மனிதனுக்குக் கீழ்ப்பட்டிராதபோது, இவர் எல்லாவற்றையும் தமது பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினார். அதாவது பிசாசுகள் ஓடின. வியாதிகள் குணமாயின. காற்று அமர்ந்தது. கடலில் நடந்தார். செத்தவர்கள் எழுந்தார்கள். இவ்விதமாக சகலத்தையும் கீழ்ப்படுத்தி, அநேகம் பிள்ளைகளை மகிமையில் சேர்க்கும் இரட்சிப்பின் அதிபதியாகிய இவர் உபத்திரவங்களினாலே பூரணப்படுத்தப்பட்டு, மரணத்தை உத்தரித்ததைக் கொண்டு, இப்பொழுது மனுஷரிலும், தேவ தூதரிலும் பெரியவராக உயர்த்தப்பட்டு, மகிமையினாலும், கனத்தினாலும் முடி சூட்டப்பட்டு, எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தைத் தரித்துக் கொண்டார். என் தேவனே என் நாவு எப்பொழுதும் உம்மை கர்த்தர் என்று அறிக்கை செய்து, என் முழங்கால்கள் எப்பொழுதும் உமக்கு முன்பாக முடங்கியிருக்கும். **(ஜெபத்தில் நினைவுகூருங்கள் :**

கிறிஸ்தவ சபை, பிரதரன் அசெம்பிளி, உத்தமபாளையம்,தாசவ நாயக்கன்பட்டி (அஞ்சல்) தாராபுரம் (வட்டம்) திருப்பூர் மாவட்டம் – 638111. **ஊழியர் :** சகோ. ஜான் இயேசுநேசன்)

**4. சனி, மனுஷனாகிய கிறிஸ்து: (ரோம. 5:12-21):** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இரண்டாம் ஆதாம் என்று அறிவிக்கப்படுகிறார். நமதாண்டவரின் மனித அவதாரத்தின் நோக்கம் பல நிலைமைகளில் அறிவிக்கப்பட்டிருக்கிறது என்றாலும், ஆதாமின் மூலமாக மீறுதலும் அதனாலே பாவமும், அதன் விளைவாக மரணமும், அதற்கு பின்பு ஆக்கினையும் வந்தது. எனவே ஆதாமின் மூலமாக உலகத்தார் எல்லாரும் பாவிகளாக்கப்பட்டார்கள். இதன் விளைவாக பாவம் செய்யாதவர்களையும் மரணம் ஆண்டு கொண்டது. இவ்வித சாபத்தை நீக்கவும், பாவங்களை பரிகரிக்கவும், பாவமில்லாத நிலைமையில் ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டது போல, அற்புதராக தேவகுமாரன் வர வேண்டியதாயிற்று. பாவத்திற்கான பிராயசித்தமாக அவருடைய மரணம் பலியாக மாறியது. அந்த பலி எல்லாருக்கும் மீட்பைக் கொண்டு வந்துவிட்டது. மீறுதல் உள்ள இடத்தில் கிருபை பெருகிற்று. எனவே நமதாண்டவர் மூலமாக நாம் மீட்பையும், கிருபையும், ஜீவனையும் பெற்று, நீதிமான்களாக்கப்படுகிறோம். என் தேவனே, உமது கிருபை வரங்களின்படி என் பாவங்களை நீக்கி, எனக்கு நித்திய ஜீவனை அருளினதற்காக ஸ்தோத்திரம். **(ஜெபத்தில் நினைவுகூருங்கள் :** கிறிஸ்தவ சபை, 727,பாராதியார் தெரு, முத்தூர் ரோடு, வெள்ளகோவில், திருப்பூர் மாவட்டம் 638111. **ஊழியர் :** சகோ.P. ஆறுமுகம்)

**5. ஞாயிறு, தரித்திரரான கிறிஸ்து: (II கொரி 8:9, யோவான் 4:31-34):** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையைப் பாருங்கள்! நம்மை ஐசுவரியவான்களாக்கும்படி நமது நிமித்தம் தரித்திரரானார். இந்த ஐசுவரியம் உலகத்திற்குரியதோ அல்லது ஆவிக்குரியதோ என்று நீங்களே யூகித்துக்கொள்ளுங்கள். ஆனால் உலகத்தில் மேன்மையாக எண்ணப்படுகிற தெல்லாம் தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது என்று ஆண்டவர் அறிந்திருந்தார். எனவே தமது மகிமையை துறந்து, அவர் உலகத்தில் பிரவேசித்த போது, அவர் பிறப்பதற்காக சத்திரத்திலும் இடமில்லாமல், அதன் வாசலில் உள்ள மாட்டுத் தொழுவம் தான் கிடைத்தது. பிள்ளையை சீராட்டி கோடி வஸ்திரம் போர்த்த தாதிமார்கள் இல்லாதபடியால் கந்தைத் துணிகளில் சுற்றி கீழேக் கிடத்தப்பட்டார். அவர் வளர்ந்தது நாசரேத்து கிராமத்திலுள்ள ஏழைத் தச்சனுடைய வீடு; ஏறக்குறைய முப்பது வருடங்கள் தரித்திரத்தில் உழன்று, புகழ்ச்சியற்ற கிராம வாசியானார். அவர் பெரியவராகி தேவ தொண்டுக்குப் போனபோது, அடிக்கடி பசி, தாகம், களைப்பு அடைந்தார். கிடைத்த உணவு எல்லாம் தர்ம சகாயம். இரவெல்லாம் மலைகளிலும், வனாந்தரங்களிலும் தனித்திருந்து, படவிலே தூங்கி, சிலுவையில் தலை சாய்த்தார். அவர் கையில் எப்பொழுதும் பணமில்லை. வரி கட்டுவதற்காக மீன் வாயிலிருந்து எடுக்கப்பட்டது. ஆகாயத்துப் பறவைகளுக்கு கூடும், நரிகளுக்கு குழிகளும் இருந்தது. அவருக்கு கால் வைத்து இளைப்பாற ஒரு வீடில்லை. பரதேசியாக சுற்றித் திரிந்தார். அவருடைய ஆஸ்திகளெல்லாம் அவர் அணிந்திருந்த உப்பால் சாரமேறிய வஸ்திரங்களும், அங்கியும் தான். அவைகளையும் போர்ச் சேவகர்கள் பறித்துக் கொண்டனர். நிர்வாணியாக என் தாயின் வயிற்றில் இருந்து வந்தேன்.

நிர்வாணியாக திரும்பி வராத தேசத்துக்குப் போவேன் என்று அவரது அடியான் சொன்னதை செயலில் முடித்தார் போலும்! ஆ! என்ன கொடிய தரித்திரம். என்னை ஐசுவரியவானாக்க என் அருமை ரட்சகர் தரித்திரரானது மட்டுமல்ல, சிலுவையின் மரண பரியந்தமும் தாழ்த்தி தன்னை மரணத்துக்கு ஒப்புக் கொடுத்தார். இந்த அன்பின் இரட்சகரை இன்று நன்றியோடு ஆராதித்து முழு இருதயத்தோடு துதிப்போமாக. **(ஜெபத்தில் நினைவுகூருங்கள் :** கிறிஸ்தவ சபை, சுவிசேஷ சிற்றாலயம், 185, முத்தம்மாள் இல்லம், பைபாஸ் ரோடு, கொடுமுடி 638151 ஈரோடு மாவட்டம்**)**

**6. திங்கள், வெறுமையான கிறிஸ்து (பிலி.2:5-11, மத்தேயு 10:5-15):** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது சுயத்தை வெறுத்தார். சுய வெறுப்பிலிருந்து வெறுமை உண்டாகிறது. இது திடீரென்று அவருடைய வாழ்க்கையில் உண்டானதல்ல. அவருடைய பன்னிரெண்டு வயது முதல் தம்முடைய பிதாவின் வேளைக்காக காத்திருந்ததின் விளைவே! அவருடைய வேளை வந்த போது, தமது அருமைத் தாயார், வீடு, தொழில், சிநேகிதர், ஊர் எல்லாவற்றையும் விட்டு வெளியேறினார். அவர் பொறுப்பற்றவர் என்று எல்லாரும் எண்ணிக்கொண்டார்கள். அவரோ தேவனுடைய வேலைக்கு வெறுமை யானவர்களே தேவை என்று உபதேசிக்க துவங்கினார். தம்முடைய சீஷர்களுக்கு, பொன்னும், வெள்ளியும், செம்பும் உங்கள் கச்சைகளில் கட்டிக் கொண்டு போக வேண்டாம் என்றார். இரண்டு அங்கிகளையும், பாதரட்சைகளையும், கையில் தடியையும் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்றார். மிக கடினமான சுய வெறுப்பையும், சீஷத்துவத்தையும் கடைப்பிடிக்க சீஷர்களுக்குக் கட்டளை யிட்டார். தாம் மிகவும் தரித்திரராக இருந்தும் தரித்திரத்தை மறந்து சுற்றித் திரிந்தார். தாம் ஏழ்மையாக இருக்கிறேன் என்று எண்ணி, அவர் குறுகிப் போகவில்லை. யாரும் தம்மை மதிக்க வேண்டும் என்பதற்காக டம்பமாக வாழ்க்கை நடத்தவும் விரும்பவில்லை. காணிக்கைப் பணத்தை பிறனிடம் ஒப்படைத்தார். சீஷர்கள் கொண்டு வந்த போஜனத்தைப் புசிக்க மறுத்தார். அவருடைய வெறுமையான வாழ்க்கை சிலுவையில் காணப்பட்டு, அவரின் உலக வாழ்க்கையில் எல்லாரும் அவரை கைவிட்டு வெறுமையாக்கினார்கள். அவரின் ஆவிக்குரிய வாழ்க்கையில் தேவனும் அவரை கைவிட்டு வெறுமையாக்கினார். மெழுகு பிறருக்காக எரிந்து கரைந்து போவது போல, எரிந்து வெறுமையானார். பலி மிருகத்தின் இரைப்பை சாம்பல் மேட்டிலே தூக்கி எறியப்படுவது போல எல்லாராலும் புறக்கணிக்கப்பட்டார். பலி மிருகம் எரிந்து சாம்பலாவது போல முற்றிலும் வெறுமையானார். அவருடைய வெறுமையின் பரிபூரணத்தைப் பற்றி யார் அறிய முடியும்? என் தேவனே, என் சுயத்தை வெறுத்து, என்னை வெறுமையாக்க உமது பிரசன்னத்தை தருவீராக! **(ஜெபத்தில் நினைவுகூருங்கள் :** கிறிஸ்தவ சபை, 190A,அண்ணா தெரு, காளிகாரயன்பாளையம், பவானி 638301 ஈரோடு மாவட்டம் **ஊழியர் :** சகோ.B. ஜான்சன்**)**

**7. செவ்வாய், அடிமையான கிறிஸ்து: (பிலி. 2:5-11, யோவான் 13:1-17; லூக்கா 22:23-30):** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பெத்தானியாவிலிருந்து எருசலேமின் மேலறைக்கு வரும்போது, சீஷர்கள் மத்தியில் சச்சரவு ஏற்பட்டது. காரியம் இது தான். ஆண்டவர் தேவராஜ்யத்தை உடனே ஸ்தாபிக்கப் போகிறார். அவர் வலது, இடது பாரிசத்தில் யார்

உட்காருவது ? எல்லாரிலும் யார் பெரியவனாயிருப்பான் ? தங்கள் ஆண்டவர் முன்னால் செல்லும் போது, சிறிதும் அச்சமின்றி பின்னால் சண்டையிட்டுக் கொண்டு வந்தார்கள். ஆண்டவர் இவைகளை கவனிக்காமலில்லை. புளிப்பில்லாத அப்பப்பண்டிகை ஆசரிக்கப்போகும் முன்னதாக எல்லா சீஷர்களிடத்திலும் புளிப்பான துர்குணம் உருவாகியது. இவர்களை பரிசுத்தப் படுத்தாமல் பண்டிகை ஆசரிப்பது கூடாத காரியம். ஆண்டவரும் சீஷர்களும் மேலறை வந்தனர். வீட்டுக்காரன் ஆண்டவருக்கு மேலறையை ஒதுக்கிக் கொடுத்துவிட்டு, தன் வேலை பார்க்கப் போய்விட்டான் போலும்! விருந்தினர் வீடாக இருந்திருந்தால் யாராகிலும் வந்து, உபசரித்து பாதங்களைக் கழுவ தண்ணீர் கொடுத்திருப்பார்கள். அப்படியும் இல்லை. சீஷர்களும் எஜமான்களாக மாறிவிட்டதால் அவர்களுக்கும் தாழ்மைப்பட இஷ்டமில்லை. தங்கள் கால்களை கழுவாமலே அவர்கள் போய் ஆசனத்தில் அமர்ந்து கொண்டனர். இவைகளை கவனித்த ஆண்டவர், அவர்களுடைய பாதங்களோடு, மனதையும் பரிசுத்தமாக்கும்படி அடிமையானார். இதோ வஸ்திரங்களை சுழற்றி வைத்து விட்டு, ஒரு துண்டை அரையில் கட்டிக் கொண்டு, ஒரு பாத்திரத்தில் நீர் வார்த்து, அவர்களுடைய கால்களை கழுவத் தொடங்கினார். இவைகளை கவனித்துக் கொண்டிருந்த சீஷர்களில் ஒருவராகிலும் அந்த பாத்திரத்தை வாங்கி நாங்கள் கழுவுகிறோம் என்று சொல்லி முன் வரவில்லை. அவர்கள் எஜமான்களைப் போல் தங்கள் ஆசனத்தில் அமர்ந்து கொண்டனர். சூரிய பிரகாசத்திலும் அதிகமான தங்கள் ஆண்டவர் அடிமையின் ரூபமெடுத்ததை உணரக்கூடாதபடி அவர்கள் இருதயம் உணர்வற்றுப்போயிற்று. என் தேவனே, ஏன் இந்த அடிமையின் கோலம் ? உத்தம வேலைக்காரனாக என்னை நிறுத்துவதற்கோ ?(**ஜெபத்தில் நினைவு கூருங்கள்:** கிறிஸ்தவ சபை, செல்வி இல்லம்,30 காந்திபுரம், தாராபுரம் ரோடு, காங்கேயம்–638301 ஈரோடு மாவட்டம். **ஊழியர்** : சகோ. N.பிரபாகரன்)

**8. புதன், கீழ்ப்படிதலுள்ள கிறிஸ்து: (பிலி. 2:5-11 எபி.5:7-10):** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கீழ்ப்படிதலைப் பற்றி யார் விவரிக்கக்கூடும் ? அவர் எப்பொழுதும் தமது பிதாவுக்குக் கீழ்ப்படிந்தே இருந்தார். முதலாவது பரலோகத்தில் வைத்து, யார் தமது காரியமாகப் போவான் என்று பிதா கேட்டபோது, இதோ உமக்குப் பிரியமானதைச் செய்ய வருகிறேன் என்றுக் கூறிக்கொண்டே புறப்பட்டார். அவர் மாட்டுத் தொழுவத்தில் தான் பிறக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்ட போது, அவருடைய சம்மதம் அல்லது கீழ்ப்படிதல் எத்தனை அருமையானது ? அவர் தமது முப்பது வயது வரைக்கும் தமது அருமைப் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து இருந்தது அருமையிலும் அருமையாகும். அவரின் கீழ்ப்படிதல் கெத்செமனேயில் வெளியரங்கமாக காணப்பட்டது. பிதாவின் திருவுளசித்தத்தை அவர் அறிந்தவுடனே அமைதலும், தைரியமும் பொருந்தினவராக, அஞ்சா நெஞ்சனாக இதோ தமது சத்துருக்களை எதிர்கெண்டார். அவருடைய விசாரணையில் அவர் குற்றமற்றவர் என்று பிலாத்து கூறி, பின்பு மரணாக்கினைக்கு அவன் தீர்ப்பளித்த போது, ஏன் என்று கேட்காமல் கீழ்ப்படிந்து மரணத்திற்குச் சென்ற காரியத்தை யார் விவரிக்க முடியும் ? இரும்பை காய வைத்து, அடித்து வளைப்பது போல, தேவகுமாரன் கீழ்ப்படிதல் மூலமாக, சிலுவை மரணத்திற்கு ஆயத்தம் செய்து அனுப்பப்பட்டார். என் தேவனே, உமது ஜீவனைவிட என்னை மீட்பதைப் பெரிதாக எண்ணி உம்மை

மரணத்திற்குக் கீழ்ப்படுத்தினீரோ ? **(ஜெபத்தில் நினைவு கூருங்கள்:** கிறிஸ்தவ சபை,11, ரங்காசமுத்திரம் சத்தியமங்கலம் ஈரோடு மாவட்டம்–638402. **ஊழியர்** : சகோதரி. உஷா ஞானசம்பத்)

**9. வியாழன், தாழ்மையுள்ள கிறிஸ்து:- (பிலி.2:5-11 மத்தேயு 3:13-17) :** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கீழ்ப்படிதலும், தாழ்மையும் ஒன்று போல சொல்லப்பட்டிருக்கிறது. அவர் ஜீவியத்தில் முதலாவது: யோவான் ஸ்நானகனிடத்தில் வந்து இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்று கூறி, தம்மைத் தாழ்த்தி ஞானஸ்நானம் எடுத்துக்கொள்கிறதை நாம் காண முடிகிறது. மேலறையில் வைத்து, தமது சீஷர்களுடைய கால்களை கழுவி, தமது தாழ்மையை விளங்கச் செய்தார். கெத்செமனேயில் அவரது தாழ்மையின் போராட்டத்தைக் காண முடிகிறது. பின்னும் அவரது விசாரணைகளில் அன்னா, காய்பா, ஆலோசனைச் சங்கம், பிலாத்து, ஏரோது ஆகியோருக்கு முன்பாக நிற்கும்போது, தாழ்மையின் சிகரமாக நின்று, பொறுமையின் சிந்தையை அவர் அணிந்து கொண்டதால், இதோ அடிக்கக் கொண்டுப் போகப்படுகிற ஆட்டைப் போல கொண்டு போகப்பட்டார் என்பது நிறைவேறியது. இவ்விதமாக அவர் தம்மைத் தாழ்த்தினதினாலே அவரது நியாயங்கள் எடுத்துப் போடப்பட்டன. ஆமை தன் ஐம்புலன்களையும் அடக்குவது போல, அவர் தம்மைத் தாழ்த்தி ஒடுங்கிப்போனார். ஆதலால் நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள் என்று அவரால் சொல்ல முடிந்தது. மலைகளுக்கு வழி பள்ளத்தாக்கில் இருப்பது போல, அவர் தம்மைத் தாழ்த்தினதின் நிமித்தமாக எல்லாவற்றுக்கும் மேலாக உயர்த்தப்பட்டார். என் தேவனே, உமது அடிச்சுவட்டைப் பின்பற்றி உமது சிந்தையைத் தரித்துக் கொள்ள அருள் புரியும். **(ஜெபத்தில் நினைவு கூருங்கள்:** கிறிஸ்தவ சபை,ஜெப வீடு, 40/46, கரும்பாலா 4வது வீதி கோபிசெட்டிபாளையம் ஈரோடு மாவட்டம்–638452. **ஊழியர்**: சகோ. G. ஜார்ஜ் வின்சென்ட் )

**10. வெள்ளி, பரிசுத்தரான கிறிஸ்து: (1 பேதுரு 2:19-25):** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பே பரிசுத்தமாகும். தேவ தூதன் மரியம்மாளுக்கு கூறும் போது, உன்னிடத்தில் பிறக்கிறது பரிசுத்தமுள்ளது. தேவனுடைய குமாரன் எனப்படும் என்றான். எனவே அவர் தம்முடைய ஜீவிய முழுவதும் பாவமில்லாதவராகவே இருந்தார். ஆகவே அவர் ஜனங்களிடத்தில் பேசும் போது, பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டு, உலகத்தில் வந்த என்னை, நான் தேவ குமாரன் என்று சொல்வதில் என்ன தவறு இருக்கிறது என்றார். மனிதர்கள் அவரை தேவ குமாரன் என்று ஒப்புக்கொள்ள தயங்கின போது, பிசாசுகள் அவரைக் கண்டவுடன், நீர் தேவனுடைய பரிசுத்தர் என்று அலறி அடித்துக்கொண்டு ஓடின. அவருடைய பரிசுத்தம் அவருடைய கிரியைகளில் விளங்கினது. எப்படியெனில் அவர் குஷ்டரோகம் போன்ற கொடிய வியாதியஸ்தர்கள், அவர் கரம் பட்டவுடன் அவருடைய பரிசுத்தத்தினால் அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டனர். இதனால் அவர் பாவம் செய்யாதவர் என்பது எல்லாருக்கும் முன்பாக ரூபகாரப்படுத்தப்பட்டது. இதனால் அவர் ஜனங்களை நோக்கி: என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக்

குற்றப்படுத்தக்கூடும் ? என்றார். இன்றுவரை அவரிடத்தில் பாவம் உண்டென்று உலகமும் ரூபகாரப்படுத்தவில்லை. அதனால் அவர் பரிசுத்தர் என்பது உறுதியாயிற்று. இதனால் அல்லவோ நமது பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாக இருக்கிறார். அவர் பரிசுத்தர் இல்லையென்றால், நம்முடைய பாவங்கள் நீங்குவது எப்படி ? நாம் தேவனுடைய சுத்திகரிப்பைப் பெற்றுக் கொள்வது எப்படி ? நாம் பரிசுத்தமாவது எப்படி ? எனவே அவர் நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டு பண்ணி, அவரை ஏற்றுக் கொள்ளுகிறவர்கள் அவருடைய இரத்தத்தினால் பரிசுத்தத்தை சுதந்தரித்துக் கொள்ளும்படி, அவர் உயிர்த்தெழுந்து பிதாவின் வலது பாரிசத்தில் போய் உட்கார்ந்தார். என் தேவனே நீசனாகிய என்னை பரிசுத்தமாக்குவதற்காக உம்மையே பலியாக்கின உம்முடைய அன்புக்காக உம்மைத் துதிக்கிறேன். **ஜெபத்தில் நினைவு கூருங்கள்:** கிறிஸ்தவ சபை, ஒசூர் ரோடு, பெட்ரோல் பங்க் எதிரில் தாளவாடி– 638461. **ஊழியர்**: சகோ.C . மகேந்திரன்)

**11. சனி, பாவமாக்கப்பட்ட கிறிஸ்து (II கொரி 5:14-21) :** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும் தேவாட்டுக் குட்டியாக வந்தார். அவருடைய ஜீவியத்தின் நெடுகிலும், ஜனங்களுடைய நோய்களையும், பாவங்களையும், சுமக்கக் கூடியவராக இருந்தார். ஆனாலும் அவர் பாவம் அறிந்ததில்லை. அவர் எப்பொழுதும் பரிசுத்தராக பிதாவின் பிரசன்னத்தினால் நிறைந்தவராக ஜீவித்தார். ஆதலால் கெத்செமனேயில் அவரைப் பிடிக்க வந்த, அவருடைய சத்துருக்கள் அவரைப் பிடிக்க முடியாமல் பின்னிட்டு விழுந்தார்கள். அவர் பாவமாக்கப்பட்டு பாவிகளில் ஒருவரைப் போலானாலொழிய எவரும் அவர் மீது கைபோட முடியாது. அவர் பாவமாக்கப்பட சம்மதித்தார். ஆனால் பிதாவின் பிரசன்னம் தம்மை விட்டு நீங்கிப் போவதை அவர் விரும்பவில்லை. இவைகளே கெத்செமனே போராட்டமாக அவருக்கு அமைந்தது. அவர் சிலுவையில் பாடுபட்டு முடிக்கும் வரை பிதா கூட முடிவில் அவரை கை விடுவது உறுதியாக்கப்பட்டது. குமாரனும் பாவமாக்கப்பட சம்மதித்து, சத்துருக்களை எதிர்கொண்டார். இந்த சமயத்தில் துரோகி யானவனுடைய வஞ்சக முத்தத்தினால் அவர் பாவமாக்கப்பட்டார். சொல்லி முடியாத அருவருப்பை தேவ குமாரன் உணர்ந்தார். அவருடைய வல்லமை வஞ்சக முத்தத்திற்குக் கட்டுப்பட்டது. சாத்தான் அவருடைய குதிங்காலை நசுக்குவது நிறைவேறியது. தேவகுமாரன் தம்முடைய இரு கரங்களையும் கட்டப் படுவதற்காக ஒப்புக் கொடுத்து, அவர்கள் அவரைக் கட்டியவுடன் இதோ ஆட்டுக் குட்டியைப் போல் அடிக்கப்படுவதற்கு தமது சத்துருக்களுக்குப் பின்னே சென்றார். என் தேவனே, என் பாவங்களையும், சுமந்து தீர்ப்பதற்காக பாவமாக்கப்பட்டீரோ ? **(ஜெபத்தில் நினைவு கூருங்கள்:** கிறிஸ்தவ சபை, பெத்தேல் ஜெபவீடு, 10/1, தான்பாடல் வீதி, காந்தி ரோடு, புஞ்சைபுளியம்பட்டி, ஈரோடு மாவட்டம் 638559)

**12. ஞாயிறு, பலவீனமான கிறிஸ்து (II கொரி 13:1-10):** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சாம்பலை அப்பமாகப் புசித்து, கண்ணீரை பானமாகப் பருகி பலவீனப்பட்டுப் போயிருந்தார். இந்நிலையில் ஈசாக்கு தன் தகப்பன் தன்னை கட்டுகிறதற்காக ஒப்புக்கொடுத்தது போல பிதாவின் அன்பின் கட்டுகளுக்கு ஆண்டவரும் தம்மை ஒப்புவித்தார். இதனால் வில்லாளிகள்

அவரை சூழ்ந்து கொண்டு, வெட்டி சாய்த்த வாழையைத் தூக்கி ஆணிகளில் தொங்க விடுவது போல, பலவீனத்தால் துவண்டு போன அவரை, சிலுவையில் உருவக் குத்தி தொங்க விட்டார்கள். என்பிலதனை வெயில் போல காயுமே என்பதின்படி குமாரன் அன்பற்றவரைப் போல, பிதாவின் நீதியின் அனலில் புழுவாகத் துடித்துக்கொண்டிருந்தார். அவர் தம்முடைய ஆத்துமாவைத் தண்ணீரைப் போல மரணத்தில் ஊற்றும் போது, அவருடைய இருதயம் மெழுகு போலாகி அவரின் குடல்களின் நடுவே உருகிற்று. அவர் உடைந்த பாத்திரத்தைப் போலாகி மரணத்தின் தூளுக்குத் திரும்பி, புழுதியில் இறங்கினார். அவருடைய எலும்புகள் ஒரு கொள்ளியைப் போல எரியுண்டு மாம்சத்தோடு ஒட்டிக் கொண்டது. அவருடைய நாவு வறண்டு மேல் வாயோடு ஒட்டிக் கொண்டது. அவருடைய கண்கள் செந்நீராய்க் கொட்டிப் பூத்துப்போனது. அவருடைய முகம் அந்தக் கேடடைந்ததால் அநேகர் பிரமித்து, வாயை மூடும் அளவுக்கு விரும்பத்தக்க ரூபம் இல்லாமல் உருக்குலைந்து போனார். என் தேவனே, நீர் தேவ கோபாக்கினையில் வெந்து, எனக்காக ஜீவ அப்பமாக மாற உருகிப் போனீரோ ? கர்த்தாவே நான் இந்த சிந்தையோடு உம் பாதம் வீழ்ந்து உம்மை ஆராதித்து மகிழ்கிறேன். **ஜெபத்தில் நினைவு கூருங்கள்:** 26, காந்திபுரம், தாராபுரம்–638656 திருப்பூர் மாவட்டம். **ஊழியர்** : சகோ. தாமஸ் கோஷி)

**13. திங்கள், சாபமான கிறிஸ்து (கலா 3:10-14):** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மரத்திலே தூக்கிக் கொலை செய்யப்பட்டு, நமக்காக சாபமானார். துரோகத்திற்குரிய தண்டனையாக நியாயப் பிரமாணங்களின் மூலமாக அளிக்கப்படுவது தான் மரத்திலே தூக்கிக் கொலை செய்யப்படுவதாகும். முதலாவது இத்தண்டனை எகிப்திலே நிறைவேற்றப் படுகிறதைப் பார்க்கிறோம். அதாவது பார்வோனுக்கு விரோதமாக எழும்பின இரு பிரதானிகளில் ஒருவன் குற்றவாளியாக கண்டுபிடிக்கப்பட்டு, தூக்கிலிடப் பட்டான். ஒருவன் தான் முந்தி இருந்த நிலைக்கு உயர்த்தப்பட்டான். இச் சம்பவம் பரலோகத்தில் மகிமையின் தேவனுக்கு விரோதமாக எழும்பின கேருப் என்ற தூதன், பூமிக்குத் தள்ளப்பட்டு மரணத்திற்கு அதிகாரியானான். அவனை தமது மரணத்தினாலே அழிப்பதற்காக இவ்வித மரணத்தை நமதாண்டவர் ஏற்றுக் கொள்ள வேண்டியதாக இருந்தது. இச்சம்பவங்களுக்கு முன்னடையாளங்களாக வனாந்திரத்தில் நடந்து வந்த ஜனங்களை கொள்ளிவாய் சர்ப்பங்கள் கடிக்க, அவைகளை அடித்துத் தொங்கவிடப்படும் பாவனையாக வெண்கலசர்ப்பம் செய்து கம்பத்தில் தூக்கி வைக்கப்பட்டது. மேலும் தாவீது ராஜாவுக்கு விரோதமாக எழும்பின அப்சலோம் மரத்திலே தொங்கி அடித்துக் கொல்லப் பட்டான். மொர்தெகாய்க்கு விரோதமாக எழும்பின ஆமான் தான் செய்த தூக்கு மரத்திலே தூக்கிக் கொல்லப்படுவதும், நமதாண்டவரின் மரணத்திற்கு முன்னடையாளமாக இருந்தது. எனவே நியாயப்பிரமாணங்களினால் சபிக்கப்பட்டிருந்த நம்முடைய சாபங்களை ஏற்று, மரணத்தின் அதிகாரியான பிசாசையும் அழித்து, இவ்விதமாக சாபத்துக்கு நீங்கலாக நம்மை மீட்டுக் கொண்டார். என் தேவனே, எனக்காக நீர் சாபமாகி என்னை மீட்டுக் கொண்ட உம்முடைய தயவுக்காக உம்மைத் துதிக்கிறேன். **(ஜெபத்தில் நினைவு கூருங்கள்:** கிறிஸ்தவ சபை , ஜெருசலேம் சுவிசேஷ மன்றம், 12, மருதமுத்து தோட்டம்,

வங்கப்பாளையம் கரூர்–639006. **ஊழியர்** : சகோ.K.எசேக்கியேல், 34, புகலூர் மெயின் ரோடு, கரூர்–639001)

**14. செவ்வாய், ஒப்புக்கொடுத்த கிறிஸ்து (1 தீமோ 2:1-7 லூக்.9:28-31):** என்னவென்றால் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்காக தம்மைத்தாமே மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார். அவருடைய ஒப்புக் கொடுத்தல் மனப்பூர்வமானது. அவர் யூதேயாவுக்கு வரும் முன்னதாக தம்முடைய சீஷர்களோடே ஒரு மலையின் மேல் ஏறி ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கும் போது, மறுரூபமானார். அப்போது அவர் முகரூபம் சூரியனைப் போலப் பிரகாசித்தது. அவருடைய வஸ்திரங்களெல்லாம் வெளிச்சத்தைப் போல வெண்மையாயிற்று. அப்பொழுது மோசேயும், எலியாவும் அவரிடம் வந்து, அவர் எருசலேமில் நிறைவேற்றப்போகிற அவருடைய மரணத்தைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆண்டவர் இவ்வித இழிவான மரணத்திற்குட்பட்டு, அவமானமடையவேண்டிய அவசியமில்லை. அவருடைய உலக ஜீவியத்தில் அவர் பரிபூரணம் ஆகிவிட்டபடியால், இதோ இப்பொழுதே பரலோகத்திற்குப் போகக் கூடிய தகுதியும், மறுரூபமும் பெற்றுவிட்டார். எனவே உமக்கு மரணம் அவசியமில்லை என்று எலியா கூறியிருப்பார். ஆனால் மோசே உம்மைக் குறித்து புஸ்தக சுருளில் எழுதியிருக்கிறது. பின்பு அவைகளை நிறைவேற்றக் கூடிய தகுதியானவர் ஒருவருமில்லை என்றிருப்பார். இந்நிலையில் நமதாண்டவர் தம்மை மனப்பூர்வமாக உலகத்தின் மீட்புக்காக ஒப்புக்கொடுத்த நிலையில் அவருடைய மறுரூபம் கலைந்தது. அவர் மலையிலிருந்து கீழே இறங்கினார். எருசலேமுக்கு நேராகத் தம் முகத்தைத் திருப்பி சீஷர்களுக்கு முந்தி நடந்து போனார். என் தேவனே, என்னையே மீட்கவே தன்னையே தந்தீரோ ? என்னில் அன்புகூர என்ன நான் செய்தேனோ ? ஏன் உம்மை ஒப்புவித்தீர் ? **(ஜெபத்தில் நினைவு கூருங்கள்:** கிறிஸ்தவ சபை, சீயோன் கிறிஸ்தவ சபை, 108A, செங்குந்தர் நகர் வெங்கமேடு, கரூர் –639006. **ஊழியர்**: சகோ. கெர்சோம் நப்தலி 1/386 எபிநேசர் இல்லம், ஆத்தூர் ரோடு, வெங்கமேடு அஞ்சல், வங்கப்பாளையம் கரூர் – 639006)

**15. புதன், புறக்கணிக்கப்பட்ட கிறிஸ்து (II தீமோ. 2:8-13; ஏசா 53:1-3):** என்னவென்றால் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வாழ்க்கை நடத்தின கானான் தேசத்தில் மூன்று இடங்களின் விசேஷம்; அவர் பிறந்த ஊர் பெத்லகேம். அங்கு இருந்த சத்திரத்தில் அவருக்கு பிறக்க இடமில்லை. அவர் வளர்ந்த ஊர் நாசரேத். அங்கு அவ்வூரார் அவரை ஊரைவிட்டு புறம்பாக்கி, கொலை செய்ய எத்தணித்தனர். அவருக்காக தேவாலயம் கட்டியிருந்த ஊர் எருசலேம். அவ்வூரார் அவரை ஊருக்குப் புறம்பே தள்ளி கொலை செய்தனர். இவ்விதமாக தம் சொந்த ஜனங்களால் முற்றிலுமாக புறக்கணிக்கப்பட்டார். அவர் காய்பாவின் மாளிகையில் நின்று, தம்மை தேவகுமாரன் என்றதால், அவர் முகத்தில் துப்பி, தலையில் குட்டி, கண்களைக் கட்டி, கன்னத்தில் அறைந்து, அங்கிருந்து அவரை புறக்கணித்தார்கள். அவர் பிலாத்துவுக்கு முன் நின்று தம்மை ராஜா என்று ஒப்புக் கொண்டதால், அவரை வாரினால் அடித்து, கிழிந்த சிகப்பு அங்கியை அவருக்கு உடுத்தி, முள் முடியை அவர் சிரசினில் சூட்டி, மூங்கில் தடியை அவர் கையில் கொடுத்து, சிரசில் கோலால் அடித்து, முகத்தில் துப்பி, சிலுவையில் அறைந்து தொங்கவிட்டனர். இவ்விதமாக யூதர், ஏதோமியர், ரோமர் ஆகிய மூவித ஜாதிகளால் புறக்கணிக்கப்பட்டு மரணமடைந்தார். என்

தேவனே, பெத்தலை மனையிலும், நாசரேத்து குடிகளிலும், சாலேமின் நாட்டிலும் தலை சாய்க்க இடமின்றி, தம் புயத்தில் தலை சாய்த்து ஏன் உம்மை ஒப்புவித்தீர் ? என்னை நேசித்ததாலோ ? **(ஜெபத்தில் நினைவு கூருங்கள்:** கிறிஸ்தவ சபை, அன்பு இல்லம், தங்க மாளிகை அருகில், லாலாபேட்டை, கரூர் – 639109)

**16. வியாழன், பாடுபட்ட கிறிஸ்து (எபி.13:10-13):** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பாடு அனுபவித்தவரும், துக்கம் நிறைந்தவருமாயிருந்தார். அவர் கபாலஸ்தலத்தில் நியாயப்பிரமாணங்களின்படி பலியாகவும், மகா பிரதான ஆசாரியர் என்ற நிலையில் நிந்தைகளையும், பாடுகளையும் அடைய வேண்டியதாகவும் இருந்தது. அதன்படி அவர் தமது ஜனத்தை பரிசுத்தம் செய்யும் படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார். அவர் கரங்களிலும், பாதங்களிலும் உருவக் குத்தினார்கள். அவருடைய தாகத்திற்கு கசப்பு கலந்து கொடுத்தார்கள். அவருடைய வஸ்திரங்களை உருவி அவரை அவமானப் படுத்தினார்கள். அவரை நிந்தித்து நீர்த்தூளியாக்கினார்கள். தேவ கோபாக்கினையில் வெந்து, சாம்பலாகுமுன்னே அவர் பிரகாசிக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டது. சுடச்சுட ஒளிரும் பொன்போல அவர் பிரகாசத்தை வெளிப்படுத்த வேண்டியதாக இருந்தது. கல்லெறியுண்ட கனி தித்திப்பது போல, இந்நிலையிலும் அவர் உலகத்தாருக்கு மதுரமாக வேண்டியிருந்தது. வெட்டப்பட்டமரம் வாசனையளிப்பது போல, அவருடைய திவ்ய சுபாவம் வெளிப்பட வேண்டியதாக இருந்தது. மலரை நசுக்கியவுடன் மணம் வீசுவதுபோல, அவர் நைந்து பரிமனமளிக்க வேண்டியதாக இருந்தது. தூபவர்க்கம் அக்கினியில் உருகி சுகந்த வாசனை உண்டாக்குவது போல, அவர் எரிந்து, உருகி, தமது ஆசாரியத்துவத்தின் சுகந்த வாசனையை தேவனுக்கு ஏறெடுத்தார். ஆம்! பிதாவே இவர்களுக்கு மன்னியும் என்று கதறினார். சூழ நின்ற மாக்களும், பதர்களும் அவ்வாசனையை நுகர்ந்தனர். என் தேவனே, உமதாவியை பிதாவுக்கும், ஆத்துமாவை மரணத்திற்கும், சரீரத்தையே சண்டாளர்களுக்காய்த் தந்து உம்மை ஒப்புவித்து, வெறுமை ஆக்கி, ஏன் உம்மை ஒப்புவித்தீர் ? என்னை நேசித்ததாலோ ?**(ஜெபத்தில் நினைவு கூருங்கள் :** கிறிஸ்தவ சபை 8/126, மாதா கோயில் தெரு, பெட்டவாய்தலை, கரூர் மாவட்டம் – 639112. **ஊழியர்** : சகோ. சாலொமோன் ராமராஜ்)

**17. வெள்ளி, நிந்திக்கப்பட்ட கிறிஸ்து (மத்தேயு 27:39-43, சங்.22:6-8; 69:19-21):** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மகிமையில் ஆவிகளின் போற்றுதலால் ஆனந்தம் கொண்டிருந்தவர். இங்கு சிலுவையில் தொங்கும்போது நிந்திக்கப்பட்டவராக இருதயத்தில் நொறுங்கிக் கொண்டிருந்தார். அவரைக் கண்டமாக்கள் தங்கள் தலைகளை துலுக்கி, உதட்டைப் பிதுக்கி ஆ... ஆ... ஆ... என்று பரிகசித்தனர். மற்றவர்களை இரட்சித்தான். இப்பொழுதோ தன்னைதானே இரட்சித்துக் கொள்ள திராணி இல்லாதவன் என்று இகழ்ந்தார்கள். தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே உன்னை நீயே இரட்சித்துக் கொள் என்றார்கள். நீ, கிறிஸ்துவானால், இஸ்ரவேலின் ராஜாவானால், சிலுவையை விட்டு கீழே இறங்கி வா என்று தூஷித்தார்கள். இவன் தன்னை தேவனுடைய குமாரன் என்று சொல்லி தேவன் மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவன் மேல்

பிரியமாயிருந்தால் இப்பொழுது இரட்சிக்கட்டும் என்று நிந்தித்தார்கள். வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சின மாதிரியான இவர்களுடைய நிந்தனைகள் தேவ குமாரனுடைய இருதயத்தைப் பிளந்தது. அது மெழுகாக உருகி குடல்களின் நடுவே ஓடிற்று. அவர்கள் அவர் விலாவைக் குத்திப் பிளந்தபோது இரத்தமும் தண்ணீரும் அவர்களுக்காக சிந்தியது. இந்த ஞானக்கன்மலைப் பிளக்கப்பட்டதினால் ஜீவநதி புறப்பட்டு உலகத்தின் கடைசி எல்லை வரை புரண்டு போயிற்று, என் தேவனே நீர் தன்னைத்தான் இரட்சிக்காமல் உம்மையே எனக்காக தந்ததால் நான் என்ன செய்வேன் ? **(ஜெபத்தில் நினைவு கூருங்கள்:** எபநேசர் சுவிசேஷ மன்றம், 10, சிரியன் சர்ச் ரோடு–3 கோயம்புத்தூர் – 641001. **ஊழியர்** : சகோ.ஜோசப் ராஜன், ''கிருபாதானா'' 6/64, ராமனுஜநகர், குனியமுத்தூர் கோயம்புத்தூர்–641008)

**18.சனி, கைவிடப்பட்ட கிறிஸ்து (1 பேது 3:17-19 சங்.22:1-5):** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு விலையேறப்பெற்ற, மிகவும் அருமையான வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. அவைகளாவன: நான் உன்னை விட்டு விலகுவதும் இல்லை. உன்னைக் கைவிடுவதும் இல்லை. இமைப் பொழுதும் உன்னைக் கைவிடேன். கடைசிவரை உன்னைக் கை விடாதிருப்பேன். உனக்கு விரோதமாக எழும்புகிற ஆயுதங்கள் ஒன்றும் வாய்க்காதேபோம் என்பன போன்ற நூற்றுக் கணக்கானவைகள் உண்டு. ஆனால் அவைகளெல்லாம் இப்பொழுது எங்கே ? என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என்று இதோ நேச குமாரன் கதறுகிறார். முற்பிதாக்கள் அவர் மீது நம்பிக்கை வைத்து, அவரைக் கூப்பிட்ட போது, அவரை விடுவித்தார். ஆனால் நேச குமாரன் கூப்பிட்ட போது முற்றிலுமாக கைவிட்டார். இந்த தீர்க்கதரிசியைப் பிடியுங்கள் என்று கூறினவனுடைய நீட்டிய கை மடக்கக் கூடாமல் போனது. ஆனால் தமது குமாரன் மீது கை போட்டு பிடிக்கும்படியாக கைவிட்டார். மேலும் தம்முடைய தீர்க்கதரிசியைக் காப்பாற்றும்படியாக, அக்கினி இரதங்களையும், ஆயிரமாயிரம் தூதர்களையும் அனுப்பி வைத்தார். இதோ தமது குமாரனுக்குள்ள எல்லா பாதுகாப்பையும் தகர்த்தார். அவர் நம்பியிருந்த சிநேகிதர்களும் அவரை தனியே விட்டு, விட்டு ஓடிப்போனார்கள். மேலும் தம்முடைய தீர்க்கதரிசியை நிந்தித்தவர்களை பட்சிக்க கரடிகளை அனுப்பினார். ஆனால் தமது குமாரன் நிந்திக்கப்பட்டபோது, அவரின் இருதயமே நொறுங்கிப் போகும்படி கைவிட்டார். பின்னும் தமது ஊழியக்காரன் தாகமாக இருக்கிறேன் என்ற போது, பூமியைப் பிளந்து, தண்ணீர் சுரக்கும்படி செய்தார். ஆனால் தமது குமாரன் தாகமாயிருக்கிறேன் என்றபோது, தண்ணீர் தரவில்லை. அதற்கு பதிலாக காடியைக் கொடுத்தார்கள். மனுஷனுடைய நிர்வாணத்தைப் பார்த்தவன் சபிக்கப்பட்டவன் என்று அவைகளை மறைக்க தோல் வஸ்திரங்களை உடுத்தினார். இதோ தமது குமாரனுடைய வஸ்திரங்களை உரிந்து, அவரை அவமானப் படுத்துவதற்காகக் கைவிட்டார். ஆபிரகாமே பிள்ளையாண்டான் மீது, உன் கையைப் போடாதே என்று அவனது மகனைக் காப்பாற்றினவர், தமது நேசக் குமரனை மரணத்திற்குள்ளே துடிதுடிக்கும்படி கைவிட்டார். என் தேவனே நீசனும் பாவியுமான என்னை நீர் சேர்த்துக்கொள்வதற்காக உம்முடைய நேச குமாரனை நீர் கைவிட்டீரோ ? **(ஜெபத்தில் நினைவு கூருங்கள்:** கிறிஸ்தவ சபை, 7B, நேரு நகர் விஸ்தரிப்பு, கணபதி, கோயம்புத்தூர் – 641006. **ஊழியர்** : சகோ.

P.ஸ்டீபன்)

**19. ஞாயிறு, பலியான கிறிஸ்து (எபி.10:1-10) :** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உலகத்தில் பிரவேசிக்கும்போதே தம்மை பிதாவுக்கு பிரதிஷ்டை செய்துவிட்டார். இதை யோர்தான் நதியில் பார்க்கிறோம். அவர் ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து, கரையேறி, ஜெபித்து முடித்தவுடன், இதோ வானம் திறக்கப்பட்டு நீர் என்னுடைய நேசகுமாரன் உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று பிதா கூறினார். இவைகளை கேட்ட ஸ்நானகனும் இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி என்றார். ஆண்டவரின் ஜெபத்தைப்பற்றி தீர்க்கதரிசனமாகத்தான் இங்கு வாசிக்க முடிகிறது. அதாவது: சர்வாங்க தகனபலிகளும், பாவநிவாரணபலிகளும் உமக்குப் பிரியமானதல்ல என்றீர், எனக்காக ஒரு சரீரத்தை ஆயத்தம் பண்ணினீர். என்னைக் குறித்து புஸ்தகச் சுருளில் எழுதியிருக்கிறது. என் தேவனே, இதோ உமக்குப் பிரியமானதைச் செய்ய வருகிறேன் என்றார். அவரது நியாயப்பிரமாணம் தம் உள்ளத்தில் இருப்பதையும், பிதாவின் சத்தத்தைக் கேட்கும்படி தம்முடைய செவிகள் திறக்கப்பட்டதையும் அறிந்து, இவ்விதமாக தம்மை பிரதிஷ்டை செய்தார். அதன்படி தம்முடைய பரிசுத்தமான சரீரத்தைப் பலியிட்டார். அவர் சர்வாங்க தகன பலியானதால், தேவனுடைய நீதியின்படி முற்றிலும் தேவனால் கைவிடப்பட்டார். அவர் பாவ நிவாரண பலியானதால் நமது பாவங்களினிமித்தம் நகர வாசலுக்குப் புறம்பே புறக்கணிக்கப்பட்டு பலியானார். அவர் குற்றநிவாரண பலியானதால் பரபாஸ் மாத்திரமல்ல நாமும் விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். அவர் சமாதான பலியானதால் பரதீசு வாக்குத்தத்தம் பெற்ற திருடன் மாத்திரமல்ல நாமும் பிதாவோடு ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறோம். அவர் போஜனபான பலியானதால் இன்று அவரை நினைவுகூர்ந்து ஆராதனை செய்யும் பரிசுத்த ஆசாரியராக மாற்றப் பட்டிருக்கிறோம். என் தேவனே, நான் பிழைத்திருக்கும்படி உம்மையே கிருபாதார பலியாக பலியிட்ட உம்முடைய அன்புக்காக உமது பாதங்களில் என் சிரத்தைத் தாழ்த்துகிறேன். (**ஜெபத்தில் நினைவு கூருங்கள்:** பெதஸ்தா கிறிஸ்தவ சபை, 1/58A, தண்டல் முதல் தெரு 2, நல்லம்பாளையம், கணபதி, கோயம்புத்தூர் – 641006)

**20. திங்கள், பரிகாரியான கிறிஸ்து: (எபி.2:9-15 II தீமோ 1:10):** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மரணத்தின் அதிகாரியான பிசாசானவனை தமது மரணத்தினாலே அழிக்கும்படி வந்தபோது, அவர் மூவித நிலைமையில் மரணமடைய நேரிட்டது. (இங்கு மரணம் என்ற பதத்திற்கு பிரிவு என்ற பொருள் கொள்ளவும்) அவர் ஆவிக்குரிய நிலையில் பிதாவை விட்டுப் பிரிந்து (மரணமடைந்து) கைவிடப்பட்டார். இரண்டாவது தமது ஆத்துமாவை மரணத்தில் ஊற்றினார். அதாவது: தாம் சிந்திய இரத்தத்தினால் தம் ஆவியை விட்டு, ஆத்துமாவைத் தனியாகப் பிரித்து, பாதாளத்திற்குச் சென்று சிறைப்பட்டவர்களை விடுதலையாக்கினார். மூன்றாவது: அவருடைய சரீர மரணம் நம்முடைய பாவநிவர்த்திக்காக நடந்தது. அவர் சரீரத்தை விட்டுப் பிரிந்து (மரணமடைந்து) தமது ஆவியைப் பிதாவின் கையில் ஒப்புவித்தார். இதிலே பிரதானமாக அறிவிக்கப்படுவது அவருடைய சரீர மரணமாகும். இந்த சரீர மரணத்தை பரிகரித்தார். பரிகாரம் என்ற வார்த்தை மாற்று வைத்தியத்திற்காக உபயோகப்படும் பதமாக இருக்கிறது. ஆம்! அவர் மரணத்திற்கு மரணத்தையே

மருந்தாக கொடுத்தார். முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும் என்பார்களே, அதுபோல தமது மரணத்தினாலே மரணத்தைப் பரிகரித்தார். இரண்டாவது மரணத்தை உத்தரித்தார். உத்தரித்தார் என்ற பதத்திற்கு ஈடு கொடுத்தல் என்ற அர்த்தமாகும். ஆம்! அந்த கொடிய மரணமானது தன்னைக் கொல்லும்படி தம்முடைய சரீரத்தையே ஈடாக்கி கொடுத்தார். ஆனால் மரணம் அவர் மேல் ஜெயங்கொள்ள முடியவில்லை. அவர் மரணத்தை ஜெயித்து சரீர அழிவில்லாமல் உயிர்த்தெழுந்தார். என் தேவனே, நீர் மரணத்தினுடைய கூரை ஒடித்து, அழியாமையில் என்னையும் சேர்த்துக் கொண்டதற்காக உமக்கு ஸ்தோத்திரம். (**ஜெபத்தில் நினைவு கூருங்கள்:** கிறிஸ்தவ சகோதர சபை, ராமனுஜம் நகர், மெயின் ரோடு 2, லட்சுமி நகர் B.K. புதூர், குனியமுத்தூர் அஞ்சல், கோயம்புத்தூர் 641008. **ஊழியர்** : சகோ. E.ஜேம்ஸ்)

**21. செவ்வாய், வெற்றியடைந்த கிறிஸ்து (கொலோ. 2:9-15):** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இவ்விதமாக, நமக்கு விரோதமாக இருந்த நியாயப்பிரமாணங்களாகிய நடுச்சுவரைத் தகர்த்து, அதன் கையெழுத்துக்களை குலைத்து, நமது நடுவிலிராதபடி அதை சிலுவையில் ஆணியடித்து, தம்மைத் தாமே பலியாக்கி, அதன் பிரமாணங்களைச் சேர்த்து எரித்து சாம்பலாக்கினார். மேலும் துரைத்தனங்கள், அதிகாரங்களாகிய ஆலோசனைச் சங்கம், ரோமப்பேரரசு ஆகியவைகளின் சட்டதிட்டங் களையெல்லாம் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையில் வெற்றி சிறந்தார். அவரை மேற்கொள்ள அவைகளால் முடியவில்லை. அவருடைய வெற்றியின் வார்த்தையாக எல்லாம் முடிந்தது என்கிறார் ஆம்! நியாயப்பிரமாணங்களின் ஆக்கினையெல்லாம் முடிந்தது. அதன் பிராயசித்த பலி முறைமைகளெல்லாம் முடிந்தது. அவருடைய உலக சஞ்சாரமும் முடிந்தது. உலகம், பிசாசு, மாம்சம் இவைகளின் அதிகாரங்களுக்கு அழிவு உண்டாக்கி முடிந்தது. பிசாசினுடைய அக்கிரம கிரியைகளை அதமாக்கி முடிந்தது. உலகத்தாருக்குள்ளான மன்னிப்பும், சுத்திகரிப்பும், மீட்பும், இரட்சிப்பும் உண்டாக்கி முடிந்தது. மறுமைக்கான வாசலைத் திறந்து, ஜீவ மார்க்கத்தை உண்டாக்கி முடிந்தது. இதுவரை அறிவித்து வந்த தீர்க்கதரிசனங்களெல்லாம் நிறைவேற்றி முடிந்தது. தமது அருமைப் பிதாவின் திருவுளசித்தத்தை அவருக்குப் பிரியமுண்டாக நிறைவேற்றி முடிந்தது. சிலுவை தோல்வியின் சின்னமல்ல! அது உலகத்தையும், பிசாசையும் நடுங்க வைக்கும் சின்னம்! என் தேவனே உமது வெற்றிகளை நான் எனக்குள்ளதாக்கி தலை நிமிர்ந்து நடக்க அருள் புரிந்த உம்முடைய அன்புக்காக ஸ்தோத்திரம். (**ஜெபத்தில் நினைவு கூருங்கள்:** இம்மானுவேல் கிறிஸ்தவ சபை, 25/2A, ஸ்ரீராம் வீரபாண்டி பிரிவு, பிரஸ்காலனி, கோயம்புத்தூர் – 641019. **ஊழியர்**: சகோ. மனோகரன்)

**22. புதன், பிழைத்திருக்கிற கிறிஸ்து (II கொரி. 5:14-20, ரோம 14:8,9; எபி 13:8):** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிழைத்திருப்பதே நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தின் மகிமையாயிருக்கிறது. அவர் நேற்றும் இருந்தார், இன்றும் இருக்கிறார், நாளையும் இருப்பார். நேற்று என்ற கடந்த காலத்தில் அவர் பரிசுத்த வேதாகமத்தின் முன்னறிவிப்பின்படி, நமது பாவங்களுக்காக சிலுவையில் மரணமடைந்து, அடக்கம் பண்ணப்பட்டு,

உயிர்த்தெழுந்து, பிதாவின் வலது பாரிசத்தில் போய் உட்கார்ந்தார். இன்று என்ற நிகழ்காலத்திலே, அவர் அங்கிருந்து, தம்முடைய சகல சத்துருக்களையும், தமக்கு பாதபடியாக்கி போடும் வரைக்கும் ஆளுகை செய்து கொண்டிருக்கிறார். மேலும் மகா பிரதான ஆசாரியர் என்ற நிலைமையில் நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறதோடு, நம்முடைய ஆராதனை, ஜெபம், ஊழியம், ஜீவிய பராமரிப்பு ஆகியவைகளைப் பொறுப்பேற்று நடத்திக் கொண்டிருக்கிறார். நாளை என்ற எதிர்காலத்தில் அவர் நமக்காக வரப்போகிறார். நம்மை தம்மிடத்தில் சேர்த்துக் கொள்ளவும், தமது ஜனமாகிய இஸ்ரவேலை மீட்கவும், இந்த உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவும், மீட்கப்படாதவர்களை நியாயந்தீர்க்கவும் வரப்போகிறார். என்றென்றைக்கும் பிழைத்திருக்கிற நமதாண்டவரை நாம் முகமுகமாக சந்திக்க விழிப்புடன் கூடிய நிலையில் நமது தலைகளை உயர்த்தி நோக்குவோமாக! என் தேவனே உம்மை முகமுகமாக நான் தரிசிக்கும் போது, உமக்குரிய பாத்திரவானாக உமக்கு முன்பாக நிற்க அருள் புரியும். (**ஜெபத்தில் நினைவு கூருங்கள்:** கிறிஸ்தவ சபை, 4 கணபதி நஞ்சப்ப கவுண்டர் தெரு, இரத்தினபுரி கோயம்புத்தூர் – 641027)

**23. வியாழன், உயர்த்தப்பட்ட கிறிஸ்து: (பிலி. 2:5-11 எபி 2:11,12:1,2; மாற் 16:19):** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இப்பொழுது எல்லா நாமத்திற்கும் மேலான நாமமுள்ளவராக, மகிமையினாலும், கனத்தினாலும் முடி சூட்டப்பட்டிருக்கிறார். அவர் பரலோகத்திலுள்ள பிதாவின் சிங்காசனத்தில், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியாகவும், கர்த்தருடைய சேனைகளின் அதிபதியாகவும், நமக்குரிய இரட்சிப்பின் அதிபதியாகவும், ஜீவாதிபதியாகவும், சர்வலோகத்தினுடைய நியாயாதிபதியாகவும் வீற்றிருக்கிறார். தம்முடைய சகல சத்துருக்களையும் அவர் தமது பாதத்திற்கு கீழாக்கிப் போடும்வரைக்கும் ஆளுகை செய்ய வேண்டியது. பின்பு அவர் உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, தமது ஜனங்களை நேரிடையாக நின்று, ஆளுகை செய்யும்படியாக அவர் பூமிக்கு வந்து, தம்முடைய தாசனாகிய தாவீதின் மகிமையுள்ள சிங்காசனத்தில் வீற்றிருந்து ஆயிரம் வருடங்கள் ஆளுகை செய்வார். அப்பொழுது மீட்கப்படாதவர்கள் அவருக்கு முன்பாகக் கொண்டு வரப்பட்டு, அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்தப்படுவார்கள். எல்லா முழங்கால்களும் அவருக்கு முன்பாக முடங்கும். அப்பொழுது வானோராகிய தூதரும், பூதலத்தோராகிய அவருடைய மீட்கப்பட்ட ஜனங்களும் பூமியின் கீழானோராகிய மீட்கப்படாதவர்களும், சாத்தானுடைய சேனைகளும் அவருக்கு முன்பாக விழுந்து, நீரே கர்த்தர் என்று தங்களுடைய நாவினால் அறிக்கை செய்வார்கள். இவ்விதமாக நமதாண்டவர் எல்லாவற்றிலும் உயர்ந்திருந்து மகிமையாகத் தோன்றுவார். என் தேவனே இன்றே என் முழங்கால்கள் உமக்கு முன்பாக முடங்கவும், என் நாவும் உம்மை கர்த்தர் என்று அறிக்கை செய்யவும் அருள் புரிந்ததற்காக உமக்கு அனந்த ஸ்தோத்திரம். (**ஜெபத்தில் நினைவு கூருங்கள்:** கர்மேல் கிறிஸ்தவ சபை, 3/3, I.T.I. மேற்கு, மணல் தோட்டம், கோயம்புத்தூர்–641029 **ஊழியர்** : சகோ. R. மூர்த்தி 3/7, தென்றல் நகர், முதல் தெரு, G.N. மில்ஸ் அஞ்சல், கோயம்புத்தூர் – 641029)

**24. வெள்ளி, முதற்பேரான கிறிஸ்து (கொலோ 1:12-18):** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சர்வ சிருஷ்டிகளுக்கும் முந்திய

முதற்பேறானவர். எல்லாம் அவருக்கென்றும், அவரைக் கொண்டும் சிருஷ்டிக்கப்பட்டது. மேலும் சகல அதிகாரங்களுக்கும் முதற்பேறானவர். சகல அதிகாரங்களும் அவராலேயே உண்டாகியிருக்கிறது. மேலும் மனுக்குலத்திற் கெல்லாம் முதற்பேரானவர். ஆதாம் முதற்பேறானவனாயிருக்கவில்லை. ஏனெனில் தேவன் ஆதாமை உருவாக்கும் முன்னே தமக்குத் தாமே ஒரு சாயலை ஏற்படுத்திக் கொண்டார். அந்த முதற்பேறானவருடைய சாயலிலேயே ஆதாம் உருவாக்கப்பட்டவனாகும். மேலும் அவருடைய பரிசுத்தமான பிறப்பை கன்னிகையில் உறுதிப்படுத்தும்படி, அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்றாள் என்று குறிக்கப்பட்டது. மரியம்மாளுக்கு அதற்கு பின்பு பிள்ளைகள் பிறந்தது என்பதற்காக அந்த வார்த்தைக் குறிக்கப்படவில்லை. அவர் பிறப்புக்கு முன்பு அவள் கன்னிகையாக இருந்தாள் என்பதை உறுதிப்படுத்தவே, முதற்பேறான என்ற வார்த்தைக் குறிக்கப்பட்டது. மேலும் மரித்தோரிலிருந்து எழுந்தவரிலும் நமதாண்டவர் முதற்பேறானவராயிருக்கிறார். அதற்குமுன்பு உயிர்த்தெழுதல் சம்பவங்கள் குறிக்கப்பட்டு இருந்தாலும் மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்தார் என்பதை உறுதிப்படுத்த முதற்பேறான என்ற வார்த்தை குறிக்கப்பட்டது. அதாவது: நமதாண்டவருக்கு முன் உயிர்த்தெழுந்தவர்கள் எல்லாரும் அவராலே எழுப்பப்பட்டவர்களாகும். நமதாண்டவரோ தாமே உயிர்த்தெழுந்து முதற்பலனானார். மேலும் சரீரமாகிய சபைக்கும் அவரே முதற் பேறானவர். அதாவது: இங்கே முதற்பேறானவர் என்ற வார்த்தை அவரை தலையாய தலைவராக இருக்கிறவர் என்பதை உறுதிப்படுத்துகிறது. என்தேவனே, சிரசுக்கு சரீரம் கீழ்ப்பட்டிருப்பது போல, நான் எப்பொழுதும் உம்முடைய ஆளுகைக்குக் கீழ்ப்பட்டிருக்க அருள் புரியும். **(ஜெபத்தில் நினைவு கூருங்கள்:** கிறிஸ்தவ சபை, 4/3, சர்ச் தெரு, மாதுளம் தோட்டம் துடியலூர், கோயம்புத்தூர் – 641034. **ஊழியர்** : சகோ. J. பாபு T.N.H.B. பகுதி– 2 வெள்ளக்கிணறு, கோயம்புத்தூர்–641029)

**25. சனி, அன்பரான கிறிஸ்து (யோவா. 3:16, கலா 2:20-21, எபே 5:25,27):** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னில் அன்பு கூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார் என்ற சிந்தையானது நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையில் பாவமன்னிப்பு, பாவ நிவர்த்தி, பரிசுத்தமாகுதல், நீதிமானாகுதல், தேவனுடைய பிள்ளையாகுதல், மறுமை சுதந்தரம், பலன்கள், நித்திய ஜீவன் இவ்வித சொல்ல முடியாத ஆசீர்வாதங்களை நாம் சுதந்தரிக்க செய்கிறது. இவ்விதமாக நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையின் இரட்சிப்பின் நிச்சயம் பெற்று நாம் ஒன்றாக கூடுதல் சபையின் ஐக்கியமாக மாறுகிறது. நமதாண்டவர் சபையிலும் அன்பு கூர்ந்தார். ஆம்! நாம் கறை திரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல், பரிசுத்தமும், பிழையற்றதுமான சபையாக நம்மை நிறுத்திக்கொண்டு, ஒரு புருஷன் தன் மனைவியினிடத்தில் அன்பு கூருவது போல, அவர் நம்மை நேசித்து, உலகத்திற்குரிய நிலைமையினாலும், ஆவிக்குரிய நிலையினாலும் நம்மை போஷித்து, உடுத்துவித்து, ஆதரித்து காப்பாற்றுகிறார். இவ்விதமான அவருடைய அன்பை சபையாக உணர்ந்த பின்பு, அவர் உலகத்திலும் அன்புகூர்ந்தார் என்ற சிந்தைக்குள் நாம் வரும்போது, உலகத்திற்கு அவருடைய அன்பைப்பற்றி விவரிக்க முயலுவது சுவிசேஷ ஊழியமாக மாறுகிறது. இந்த சுவிசேஷ ஊழியங்களை மனிதர்களின் அல்லது

அவர்களுடைய உயிரின் விலையை அறிந்தவர்களாக பாரபட்சமின்றி, அருளுடனும், அன்புடனும், தெளிந்த ஞானத்தோடும், தியாக சிந்தையோடும் செய்ய வேண்டும். என் தேவனே இவ்வித அன்பை நான் எங்குமே காணேனே! எவ்விதம் இதற்கீடு ஏழை நான் செய்குவேன்! (**ஜெபத்தில் நினைவு கூருங்கள்: ஊழியர் :** சகோ. M. ஜெயக்குமார் நல்லதம்பி 12/211 அமர்ஜோதி நகர், துடியலூர், கோயம்புத்தூர் – 641034)

**26. ஞாயிறு, மீட்பராகிய கிறிஸ்து: (1 தீமோ. 2:1-6, 1 பேது 1:18,19):** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டிருக்கிறோம். இந்த சிந்தையில் நிலைத்திருக்ககடவோம். நாம் முற்காலத்தில் வீணான நடத்தைகளிலும், அழிவுக்குரிய வழிகளிலும், துன் மார்க்கத்திலும் பேய்த்தனத்திற்கடுத்தக் காரியங்களிலும் சிக்குண்டு இருந்தோம். அதிலிருந்து மீட்பதற்காக முற்காலத்தைப் போல வெள்ளியும், பொன்னும் கிரயமாகக் கொடுக்கப்படவில்லை. நமதாண்டவர் தமது ஜீவனாகிய இரத்தத்தையே கிரயமாக கொடுத்து, நம்மை மீட்டிருக்கிறார். நம்மை பல ஜாதிகளிலிருந்தும், கோத்திரங்களிலிருந்தும், பாஷைக்காரர்களிலிருந்தும், தம்முடைய மகிமைக்காக நம்மை மீட்டுக் கொண்டிருக்கிறார். இது நித்தியமான மீட்பு. அவர் கொடுத்ததை இடையே பறித்துக்கொள்ளுகிற மீட்பல்ல. அது நித்தியம் வரைக்கும் நம்மை கொண்டு செல்லக் கூடிய விலையேறப் பெற்ற மீட்பு இந்த மீட்பின் அருமையை எண்ணி அவருக்கு பரிசுத்தவான்களாக ஜீவிப்போமாக! என் தேவனே உமது மீட்பின் அருமையை எண்ணி நான் நன்றியுள்ளவனாக உமக்கென்று நிலைநின்று இன்று உம்மை ஆராதிக்க எனக்கு கிருபை செய்வீராக. (**ஜெபத்தில் நினைவு கூருங்கள்:** இந்தியன் சகோதர சபை, 10 மருதம் நகர், கோவைபுதூர், கோயம்புத்தூர் – 641042. **ஊழியர்** : சகோ. C.J. ஜார்ஜ் மனாசே)

**27. திங்கள், உடன்படிக்கையின் கிறிஸ்து (எபி. 9:11-24):** நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து நம்மோடு புதிய உடன்படிக்கை செய்திருக் கிறார். பழைய உடன்படிக்கைக்கும், புதிய உடன்படிக்கைக்கும் உள்ள வித்தியாசங்களை அறிய முயற்சிப்போம். முதலாவது: பழைய உடன்படிக்கையை இஸ்ரவேலர்களோடு தேவன் செய்தார். அதன் பொருள் இதுதான். அவர்கள் தேவ சந்நிதிக்கு வரும்போது அவர்களுடைய பாவ நிவர்த்திக்காக தங்களுடைய ஜீவனுக்கு ஈடாக வேறொரு ஜீவனைக் கொண்டு வர வேண்டும் எனக் கட்டளைப் பெற்றார்கள். அதன்படி அவரவர் சக்திக்கு இயன்றபடி அவர்கள் காளையையோ, ஆட்டையோ, பறவைகளின் குஞ்சுகளையோ கொண்டு வந்தார்கள். அவர்களுடைய பரிசுத்தத்திற்காக சுத்திகரிப்புச் சடங்குப் பிரமாணங்கள் கொடுக்கப்பட்டன. இந்த பாவ நிவர்த்திக்குரிய ஆசரிப்புகளை பிரதான ஆசாரியனும் அவனுடைய பிள்ளைகளுமாகிய ஆசாரியர்கள் செய்தார்கள். அப்படியிருந்தும் அவர்கள் தேவ சந்நிதிக்கு வருகிற சமயத்தில் எல்லாம் தங்களிடத்தில் பாவங்கள் உண்டென்றும், தாங்கள் பாவிகள் என்று நினைவு கூர்ந்தார்கள். அவர்கள் மனசாட்சிப் பூரணப்படவில்லை. அவர்கள் நியாயப்பிரமாண சபையாக, குறிக்கப்பட்ட தேவனுடைய வாசஸ்தலத்துக்கு முன்பாக கூடி வந்தும் பயனளிக்கவில்லை. இவ்வித ஆசரிப்புகளை நமதாண்டவர் முதல் வருகை மட்டும் செய்து வந்தார்கள். இரண்டாவது: புதிய உடன்படிக்கை

என்பது உலகில் உள்ள எல்லா ஜாதிகளோடும் தேவன் செய்ததாகும். நமது பாவ நிவர்த்திக்காக நமதாண்டவரே நமக்காக பலியாகி விட்டார். மேலும் அவரே நமக்காக மகா பிரதான ஆசாரியரானார். நாம் அவருடைய பிள்ளைகளானதால் இன்று புதிய உடன்படிக்கை ஆசாரியர்களாக நாம் அவரை நினைவுகூர்ந்து ஆராதனை செய்யும் நிலைமைக்கு உரிமைப் பெற்றோம். நம்முடைய ஆவிக்குரிய பலிகளாகிய அப்பம், திராட்சரசம் வைத்து நாம் ஆசரிக்கும் போது, நம்முடைய பாவங்கள் நிவர்த்தி செய்யப்பட்டதை நினைவு கூருகிறோம். நம்முடைய பரிசுத்தத்திற்காக சடங்குப் பிரமாணங்கள் இல்லை. அதற்கு பதிலாக பரிசுத்த ஆவியானவர் நம்மை பரிசுத்தப்படுத்துகிறார். நாம் குறிப்பிட்ட இடத்தில் கூடவேண்டிய அவசியம் இல்லாதபடி, எல்லா இடங்களிலும் கூடும் தேவனுடைய சபையாக மாறிவிட்டோம். இவ்வித சபையும், ஆராதனை ஆசரிப்பும் நமதாண்டவர் இரண்டாம் வருகை மட்டும் நடைபெற வேண்டும். நம் தேவன் நம்மோடு செய்த புதிய உடன்படிக்கையில் நாம் அவரில் நிலைக்கொண்டு அவரை மகிமைப்படுத்துவோமாக. (**ஜெபத்தில் நினைவு கூருங்கள்:** கிறிஸ்தவ சபை,7/198, விஜிபி பிரேம் நகர், சக்தி மெயின் ரோடு, கீரநத்தம், கோயம்புத்தூர் – 641035. **ஊழியர்** : சகோ. J. சுதன்)

**28. செவ்வாய், இரட்சகராகிய கிறிஸ்து (1 பேது 1:8-12 பிலி 2:13 ரோம. 5:6-11):** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்கு அருளிச்செய்த இரட்சிப்பு நமக்கு முக்காலங்களில் பாதுக்காக்கக்கூடியதாக இருக்கிறது. (இங்கு இரட்சிப்பு என்ற பதத்திற்கு பாதுகாப்பு என்ற அர்த்தமாகும்) முதலாவது: அவர் அடைந்த மரணத்தின் பேரில் நம்முடைய ஆத்துமாவை நரகத்திற்கும், நியாயத்தீர்ப்புக்கும், நித்திய அழிவுக்கும் விலக்கி இரட்சித்தார். இது இயேசுவானவரை நாம் ஏற்றுக் கொண்டவுடன் நமக்குக் கிடைத்த கடந்த கால இரட்சிப்பாகும். நிகழ்காலத்தில் உலகம், பிசாசு, மாம்சம், நம்மை மேற் கொண்டு, பயனற்றவர்களாக ஆக்காதபடிக்கு, அவர் தேவ வசனத்தினாலும், பரிசுத்த ஆவியானவரினாலும் இரட்சிக்கிறார். எதிர் காலத்தில் இந்த பாவ உலக சந்நிதானத்திலிருந்து, பாவ சரீரத்திலிருந்து, முற்றிலுமாக மாற்றி நம்மை மறு ரூபமாக்கி இரட்சிக்கப் போகிறார். அப்பொழுது இந்த உலகத்திற்கு ஏற்படப் போகிற கோபாக்கினையினின்று இரட்சிக்கப்படுவோம். இவ்வித முக்கால இரட்சிப்புக்காக நாம் அவரை மகிமைப்படுத்துவோமாக, என் தேவனே திக்கற்ற என்னை நேசித்து, இரட்சித்த உமது மகாப் பெரிய வல்லமைக்கு முன்பாக என்னையே சரணாகதி ஆக்குகிறேன். (**ஜெபத்தில் நினைவு கூருங்கள்: ஊழியர்**: சகோ. அமர் குமார் பீகார், BRO. AMAR KUMAR, C/O.DR.KUMAR, DHRAMGANJ MANJHIA ROAD,BISHARI MANDIR, KISHENGANJ BIHAR 855107)

**29. புதன், மகாபிரதான ஆசாரியராகிய கிறிஸ்து (எபி. 8:1-6):** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்காக மகாபிரதான ஆசாரியராக இருந்து நமக்காக பிதாவிடம் பரிந்து வேண்டுகிறார் என்ற சிந்தையானது நாம் விசுவாச ஜீவியத்தில் முன்னேறிப் போக நமக்கு தைரியத்தை அளிக்கிறது. முதலாம் உடன்படிக்கையின் பிரதான ஆசாரியனையும், புதிய உடன் படிக்கையின் மகாபிரதான ஆசாரியரையும் நாம் அறிய சற்று முயற்சிப்போம். முதலாம் உடன் படிக்கையின் பிரதான ஆசாரியன் தனக்காகவும், சபைக்காகவும் பலிகளை செலுத்தும்படி நியமிக்கப்படுகிறான். இவன் ஜீவனுக்கு ஜீவன் என்ற பிரமாணத்தை நீக்கி, தன் ஜீவனுக்காக அந்நிய இரத்தங்களை தேவ

சமூகத்திற்கு கொண்டு செல்கிறான். இவன் செய்யும் ஆசரிப்புகள் எல்லாம் மாம்ச சம்பந்தமாக இருக்கிறது. அவன் பூமிக்குரிய தேவனுடைய வாசஸ்தலத்துக்கு ஆசாரியனாக இருக்கிறான். இவனுக்கு மரணம் வரும் போது வேறு ஆசாரியன் மாற்றப்படுகிறான். நியாயப்பிரமாணத்தின்படி செய்யும் இவனுடைய ஆசரிப்புகளெல்லாம் பழைய உடன் படிக்கையின் நிழலாகவும் இருக்கிறது. புதிய உடன்படிக்கையின் மகாபிரதான ஆசாரியராகிய நமதாண்டவர் தம்மையே ஒரே முறை பலியிட்டு மீட்பை உண்டாக்கினார். இவர் தமது சொந்த இரத்தத்தை கொண்டு பரலோகத்தினுள்ள தேவனுடைய வாசஸ்தலத்திற்கு சென்று நமக்காக பரிந்து பேசுகிறார். இவர் ஆவிக்குரிய ஆசாரியராகவும் மாறிப்போகாத ஆசாரியராகவும் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் நிலைத்திருக்கிற ஆசாரியராகவும் இருக்கிறார். இந்த ஆவிக்குரிய ஆசாரியரின் ஆசரிப்பு பொருளாகவும், புதிய உடன்படிக்கையாகவும் இருக்கிறது. என் தேவனே, அற்பப் பூச்சியாகிய எனக்காக நீர் பிதாவினிடத்தில் பரிந்து வேண்டுகிற உம்முடைய மாபெரும் தயவுக்காக உம்மைத் துதிக்கிறேன். **(ஜெபத்தில் நினைவு கூருங்கள்: ஊழியர்**: சகோ. அசோக் குமார் பீகார், BRO. ASHOK KUMAR, KARNOWL GARH VILL, SAHEB GANJ,MUZAFFARPUR, BIHAR 843125)

**30 வியாழன் ராஜாவாகிய கிறிஸ்து: (1 கொரி 15:20-28 சங். 110:1-7):** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ராஜரீகம் ஏழு நிலைமைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. முதலாவது அவர் உலகத் தோற்றத்திலிருந்து பழைய ஏற்பாட்டின் காலம் முடிகிற வரைக்கும் தமது ஜனமாகிய இஸ்ரவேல் மீதும், உலக ராஜ்யங்கள் மேலும் அவர் ஆளுகை செய்ததாகும். இரண்டாவது: அவரே நேரிடையாக வந்து, சிஷ்டிப்புகளை எல்லாம் தமது பாதத்திற்குக் கீழ்ப்படுத்தி, ஆளுகை செய்த அவருடைய பிரசன்னத்தின் ராஜ்யமாகும். இக்காலத்தில் தான், தாம் சிலுவையில் மரணமடைந்து தமது தேவ ராஜ்யத்தை பூமியில் ஸ்தாபித்தார். மூன்றாவது: அவர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது முதல், சபை திரும்ப எடுத்துக்கொள்ளப்படும் காலங்கள் வரைக்கும் அவர் தேவனுடைய வலது பாரிசத்திலிருந்து, தமது சபையையும், உலக ராஜ்யங்களையும் ஆளுகை செய்வதாகும். நாலாவது: சபையானது பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டவுடனே, ஏறக்குறைய ஏழு வருடங்கள் சபையை மட்டும் விசாரிக்கும் ஒரு தனியாட்சி நடைபெறும். ஐந்தாவது: அவர் பூமிக்கு வந்து, மகிமையின் சிங்காசனத்தில் ஆயிரம் வருடங்கள் ஆளுகை செய்வார். ஆறாவது: அந்த ஆளுகை முடிந்தவுடன் வெள்ளை சிங்காசனத்தில் வீற்றிருந்து, இறுதியான நியாயத் தீர்ப்பு செய்யும் அரசாட்சியாகும். ஏழாவது: புதிய வானம் புதிய பூமியில், அவர் ஆளுகை செய்யும் நித்திய அரசாட்சியாகும். என் தேவனே, நீசனாகிய என்னையும் உமது ராஜ்யத்தின் பிள்ளையாக சேர்த்துக் கொண்ட, உமது கிருபைக்காக உமது பாதத்தில் விழுந்து வணங்குகிறேன். **(ஜெபத்தில் நினைவு கூருங்கள்: ஊழியர்**: சகோ. பென்னி சாக்கோச்சன், பீகார், BRO. BENNY CHAKOCHAN, NEW PROFESSORS COLONY, DINAKAR NAGAR, BEGUSARAI, BIHAR 851117)

-S.**சக்தி தேவதாஸ்**

## உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

Published and Printed by Paul Aravamuthan on behalf of Sthanapathy Publication Trust and Published and printed at Bapuji Printers, 5, Kurban Ali Street, Woods Road, Anna Salai, Chennai - 600 002. Editor : E. Ravi Kumar. **APRIL 2020**